### எஸ்.எஸ்.எல்.சி. தமிழ்ப் பாட புத்தகம்

*** 85 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. தமிழ்ப்பாடபுத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசாங்கம் கடைபிடிக்கும் கொள்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Detailed Text Book in Tamil for the S.S.L.C. Examination is published by the University of Madras. Non-detailed text books are prescribed by the Education Department by selection from the books received from the publishers.

### *Board High Schools*

* 86 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether there is any proposal to improve the teaching aids and furniture in the Board High Schools under the management of special District Educational Officers: and

(*b*) if so, the details of the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government have sanctioned a scheme for payment of equipment grants to about 200 Board High Schools at the rate of Rs. 15,000 (Rupees fifteen thousand) for each school for the following purposes :—

| | RS. |
|---|---|
| (i) Science equipment, maps, charts, etc. .. | 12,000 |
| (ii) Furniture .. .. .. .. .. .. | 3,000 |
| Total .. | 15,000 |

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்தக் கருவிகள் வாங்குவதற்கு மட்டும் உதவி செய்தால் போதுமானதாக இருக்குமா? நூற்றுக் கணக்கான பள்ளிகளில் இவற்றை வைத்து சொல்லிக் கொடுப்பதற்கு உள்ள கட்டடங்களுக்கு வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த நிலையை அபிவிருத்தி செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கட்டடங்களும் வேண்டும், பொருள்களும் வேண்டும், கருவிகளும் வேண்டும். பள்ளிகள் சீரமைப்பு மகாநாடு என்று நடத்தி, மக்கள் முன்வந்து பல பொருள்களை அளிக்கிறார்கள். அரசாங்கமும் ஓரளவுக்கு மான்யம் அளிக்கிறது. பள்ளிகளிலுள்ள இந்த மாதிரியான குறைகளை கொஞ்சம் வேகமாக நீக்க வேண்டும் என்று தான் சென்ற வரவு செலவு திட்டத்தில் இந்த இனத்திற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கி, 200 பள்ளிகளுக்கு ரூ. 15,000 வீதம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதே மாதிரி பள்ளி கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. அதற்கு அரசாங்கம், பொது மக்களும்,

4th February 1966]

பஞ்சாயத்து யூனியனும் முன்வந்து உதவி அளித்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன், பொதுமக்கள் ரூ. 12,500-ம் மற்றொரு ரூ. 12,500 அரசாங்கமும் கொடுத்து, முதல் படியாக ரூ. 25,000-க்கு கட்டடம் கட்டுவது என்ற ஏற்பாடும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : இந்தப் பிரச்னையில் இருக்கக்கூடிய கஷ்டத்தை நான் உணராமல் இல்லை. கிராமப்புறத்தில் படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கிற காரணத்தினால் இந்தப் பள்ளிகளை அபிவிருத்தி செய்து கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியமாக இருப்பதன் காரணத்தினால், இந்தப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? பெரும்பாலான பள்ளிகள் பொதுமக்களின் உதவியினால்தான் கட்டப்பட்டவை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கம் எடுத்து நடத்தும் வகையிலே தான் இப்பொழுது நடந்துகொண்டு வருகிறது. முன்பு மாவட்டக் கழகங்கள் கவனித்துக்கொண்டு வந்த பள்ளிகள் இப்பொழுது அரசாங்கத்தின் மேற்பார்வையிலே நடந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும், பொது மக்களும் உதவவேண்டும் என்று கோரப்படுகிறது. அவர்களும் உதவி செய்துகொண்டு வருகிறார்கள். அரசாங்கமும் பொறுப்பை உணர்ந்து குறைகளை வேகமாக நீக்க வேண்டுமென்று தான் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : போர்டு பாடசாலைகளை அரசாங்கமே ஏற்று நடத்தும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கமே ஏற்று நடத்திக் கொண்டுதான் வருகிறது இப்பொழுது.

**திரு. ஜே. மாதா கவுடர்** : சர்க்கார் ரூ. 12,500-ம் பஞ்சாயத்து யூனியன், பொது மக்கள் ரூ. 12,500-ம் கொடுத்து கட்டடம் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மலைப் பிராந்தியத்தில் டைப் டிசைன் பிரகாரம் கட்டடம் கட்ட வேண்டுமென்றால் ரூ. 35,000 வேண்டியிருக்கிறது. ரூ. 12,500 என்று இருப்பதை மாற்றி, சரிபாதித் தொகை அரசாங்கம் கொடுக்க முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : உயர்நிலைப் பள்ளிக்கு டைப் டிசைன் ஒன்றுமில்லை. ரூ. 25,000-த்தில் எவ்வளவு கட்ட முடியுமோ அவ்வளவு கட்டலாம். மேற்கொண்டு பணம் கிடைத்தால் அதிகமாகக் கட்டலாம்.

**திரு. வை. சங்கரன்** : கிராமப்புறத்திலுள்ள பள்ளிகளில் மேஜை நாற்காலிகள் தேவையாக இருக்கிறது. இதுபற்றி தகவல் சேகரிப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கல்வி அதிகாரிகளுக்கு இந்தக் குறைகளைப்பற்றி எல்லாம் தெரியும்.

[4th February 1966

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கொரடாச்சேரியில் ரூ. 1,500 கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலங்களெல்லாம் வாங்கிக் கொடுத்து சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் பள்ளிக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. அதைக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கக்கூடிய இந்த நிலையில், பாதி பொது மக்கள் கொடுக்க வேண்டும், பாதி சர்க்கார் கொடுக்கவேண்டும் என்ற நிலை சரியாக இல்லை. அது 'ஃபெய்லூர்' ஆகிவிட்டது என்று கூடச் சொல்ல லாம். ஃபெய்லூர் ஆன இடங்களில் சர்க்கார் எடுத்து கொண்டு பள்ளிக் கட்டடங்களை கட்ட வேண்டும். இரண் டாவதாக இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். ஸயன்ஸ் சாமான்கள் நிறைய இருக்கின்றன. அவைகளை வைத்து நடத்தக் கூடிய அளவுக்கு கட்டடங்களும் கிடையாது. அதற்குத் தகுந்த பர்னிசர் முதலிய வசதிகளும் கிடையாது. இதற்கு என்ன செய்யப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விஞ்ஞான கூடங்கள் கட்டு வதற்கு தனியாக மான்யம் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு ஒரு ஆண்டில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளிக்குத்தான் இந்த மான்யம் அளிக்கப்பட்டு வந்தது. இப்போழுது இன்னும் அதிகப் பள்ளிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்த உதவியும் அளிக்கப் பட்டு வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த உயர்நிலைப்பள்ளிகளின் நிலை அரசாங்கமே ஏற்று நடத்துவது போன்றது தான் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது ஓரளவுக்கு உண்மை யாக இருக்கலாம். இருப்பினும் அந்தப் பள்ளிகளின் சர்விசில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும், அரசாங்கம் நேரடியாக நடத்தக்கூடிய பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வு, வித்தியாசம் இருக்கிறது. அவர்களையும் அரசாங்க ஊழியர்கள் என்று கருதுவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விஷயமும் அரசாங்கத் தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : தற்பொழுது போர்டு ஹைஸ்கூல் என்றிருக்கும் பெயரை மாற்றி கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல் என்று பெயர் வைக்கப்போவதாகத் தெரிகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெயரைப்பற்றி எப்படி இருக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர்கள் யோசனை கூறி னால், அதைப்பற்றி யோசிக்கலாம். இந்தப் பெயரை மாற்று கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. இப்பொழுது புதிய தாக ஒன்றும் பெயரை மாற்றுவதாக எனக்குத் தகவல் இல்லை.

4th February 1966]

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இன்னும் இந்தப் பள்ளிகளின் பெயர் 'டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹைஸ்கூல்ஸ்' என்று ஆங்கிலத்திலும் 'மாவட்டக் கழக பள்ளிகள்' என்று தமிழிலும் இருந்து வருகிறது. இப்பொழுது டிஸ்ட்ரிக்ட் போர்டும் இல்லை, கழகமும் இல்லை. அவை போன பிறகும் இம்மாதிரி பெயர் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏன்? அரசினர் உயர்நிலைப்பள்ளிகள் என்று ஏன் பெயரை மாற்றக்கூடாது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பெயரில் ஒன்றுமில்லை. இவை எத்தகைய பள்ளிகள் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். முன்பிருந்த பெயரே இப்பொழுது இருக்கிறது. கழகம் என்று இருப்பது நல்லது என்று கூட சிலபேர் நினைக்கிறார்கள். அப்படிச் சில பேர்கள் தவறுதலாக நினைக்கிறார்கள். பின்னால் அவசரப்படாமல் பெயரை மெதுவாக மாற்றிக் கொள்ளலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** நகர சபைகளைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்து நடத்துவதாக உத்தேசம் இருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு எப்பொழுதும் உத்தேசம் இல்லை. ஏதாவது ஒரு நகர மன்றம் தங்களுக்கு நிதி நிலைமை அனுமதிக்கவில்லை என்று கூறினால், அதைப் பரிசீலனை செய்து, ஒன்றிரண்டு நகர மன்றங்கள் தங்கள் பள்ளிகளை நடத்த முடியாத ஒரு நிலையில் அந்தப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. பொதுவாக, நகர மன்றங்கள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக உத்தேசம் இல்லை.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** தனியார் துறையில் நடத்தப்படுகிற பள்ளிகளை இதே போன்று சர்க்கார் எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நோக்கம் இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அம்மாதிரி நோக்கம் ஒன்றுமில்லை. தனியார் துறையிலே பள்ளிகள் நடத்துகிறவர்களும் கல்வி அபிவிருத்தியிலே பெரும் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** சர்க்கார் பங்கு ரூ. 12,500, பொது மக்கள் பங்கு ரூ. 12,500; ஆக ரூ. 25,000 என்று சொல்லப்பட்டது. ரூ. 25,000-க்கு மேற்கொண்டு எஸ்டிமேட் போட்டால், உபரித் தொகையை சர்க்கார் வழங்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதிகமாக இருந்தாலும், சர்க்கார் வழங்கும். ஆனால் முதற்படியாக ரூ. 25,000-க்கு பள்ளிக் கட்டடம் கட்டுவது என்பது அரசாங்கத்தின் எண்ணம். அப்படி ரூ. 12,500-ம் பொது மக்கள் கொடுப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன் உயர் நிலைப் பள்ளிகளுக்கு பொறுப்பு வகிக்கவில்லை என்றாலும், பஞ்சாயத்து யூனியன் ரூ. 10,000 கொடுப்பதற்கு நிதி நிலைமை அனுமதித்தால், அரசாங்கம் அதை அனுமதிக்கிறது. மேலும் ரூ. 2,500 பொது மக்களோ பஞ்சாயத்துகளோ போட்டு ரூ. 12,500 சேர்த்து;

அரசாங்கம் ரூ. 12,500 கொடுத்து முதற்படியாக பள்ளிக் கட்டடம் கட்டப்படுகிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள் தாங்களே ரூ. 12,500 கொடுத்துவிடுகிறோம், பொது மக்களிடமிருந்து ரூ. 2,500 வசூலிக்க முடியவில்லை என்று அனுமதி கேட்கிறார்கள். அம்மாதிரி ஒன்றிரண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுமதியும் வழங்கப் பட்டிருக்கிறது.

**திரு. ப. உ. சண்முகம் :** இருநூறு பாடசாலைகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாவட்ட வாரியாக எத்தனை பள்ளிகள் என்ற தகவல் தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** சர்க்கார் ரூ. 12,500, பஞ்சாயத்து கூட்டு மன்றம் ரூ. 10,000 கிராம மக்கள் ரூ. 2,500, இப்படி கட்டடம் கட்டுவதற்கு நிதி வசூலிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகள் சம்பந்த மாக மானேஜ்மெண்டார் ரூ. 12,500 கொடுத்துவிட்டால், சர்க்கார் வழங்குகிற ரூ. 12,500-ம் அவர்களுக்கு வழங்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உதவி அளிப்பதிலே ஒன்றும் ஆட்சேபணை இருக்காது என்றுதான் நினைக்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இந்தக் கிராண்டு வழங்கப்பட் டிருக்கக்கூடிய 200 பாடசாலைகளும் கழகப் பள்ளிகள்தான் என்று விவரம் தெரிகிறது. தனியார் பள்ளிகளும் இத்தகைய கிராண்டு பெறும் வகையில், அவர்கள் ஏதேனும் தொகை வழங்கினால், அதற்குத் தகுந்த வகையில் ஏதேனும் 'மாட்சிங் கிராண்டு' கொடுப்பதற்கு அரசாங்கம் செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சயன்ஸ் கிராண்டு எல்லா பள்ளி களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** ஒரு பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் 3 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தால், 3 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ. 10,000 வீதம் கொடுப்பதற்கு பஞ்சாயத்து யூனியனுக்கு அனுமதி வழங்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வளவு தூரம் நிதி அளிப்ப தற்கு பஞ்சாயத்து யூனியன் நிதி நிலை அனுமதிக்காது என்றுதான் நினைக்கிறேன். ஏதாவது ஒரு பள்ளிக்கு நிதி உதவி அளிப்பதற்கு தான் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. ஏதாவது பஞ்சாயத்து யூனியனில் அதிகமாக பணம் செலவழிக்கப்படாமல் இருந்தால், அரசாங்கத்தை அனுமதி கேட்டால், அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

4th February 1966]

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த ரூ. 25,000-ல் இப்பொழுது சர்க்கார் 50 சத விகிதம் கொடுக்கிறது. அதை 75 சத விகிதமாகக் கொடுப்பதற்கு அரசாங்கத்தில் யோசனை இருப்பதாகத் தெரிகிறது. அது எந்த நேரத்தில் அமலுக்கு வரும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்தவரையில் அவ்வாறு யோசனை ஒன்றும் இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** புதியதாக உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை துவக்கப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி இன்னும் முடிவு செய்ய வில்லை.

*Schools for the Blind, Deaf and Dumb*

* 87 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any grants are given to the school for the Deaf and Dumb and the school for the Blind in Palayamcottai;

(*b*) whether any representations were made by the Schools' managements in this regard; and

(*c*) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes, to the Director of Secondary Education.

(*c*) The Director has passed suitable orders on the representation.

**திரு எம். எஸ். செல்வராஜன் :** செவிடு, ஊமை, குருடு போன்ற குழந்தைப் பள்ளிக்கூடங்களுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த மானேஜ்மெண்டின் நிதி நிலைமை என்ன ? எத்தனை ஆசிரியர்கள் அந்தப் பள்ளியில் இருக்கிறார்கள் ? எத்தனை மாணவர்கள் அந்தப் பள்ளியில் இருக்கிறார்கள்? என்கிற கணக்குகளை எல்லாம் பார்த்து ஓரளவு நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளி

* 88 **கேள்வி.—திரு எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், வானூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள திருச்சிற்றம்பலம் உயர்நிலைப்பள்ளியில், பாண்டிச்சேரி இலாகாவைச் சேர்ந்த கிராமப் பகுதி மாணவர்கள் மேற்படி பள்ளியில் சென்ற இரண்டு ஆண்டு காலமாக மாதச் சம்பளம் கட்டிக்கொண்டு படிக்கிறார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Tuition fees were collected for one year.